REGD. No: TN/CCN/358/2021-2023.
RNI No: 1004/57
http://www.dailythanthi.com
★★★
- சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சை, திண்டுக்கல், திருப்பூர், புதுச்சேரி, பெங்களூரு, மும்பை, துபாய், கொழும்பு நகரங்களில் அச்சாகிறது -

தேவதை இலவச புத்தகத்துடன்
24 பக்கம் 700 காசு

மறக்க மாட்டோம்!

# தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

மன்னிக்க மாட்டோம்!

சென்னை (4-4-2021) ஞாயிற்றுக்கிழமை | மலர் 79 இதழ் 153
சார்வரி ஸு பங்குனி மீ 22 உ ஹிஜிரி 1442 ஷ அபான் 21

குடிப்பழக்கம் அதிகரிக்க கருணாநிதி காரணம்: ஏ.வ.வேலு 02 | துரைமுருகன் குடும்பத்தினர் ஓட்டம் 03 | தலித் மக்களை அவதூறாக பேசிய தி.மு.க. எம்.பி. கைது 04

# தி.மு.க. ஆட்சியில் 14,523 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பு

## தணிக்கை அறிக்கையில் தகவல்

■ தினமணி
20.09.2012

கடந்த தி.மு.க. ஆட்சியில் ரூ. 1,220 கோடி மதிப்புள்ள 14,523 ஏக்கர் அரசு மற்றும் நீர்நிலை நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேரவையில் புதன்கிழமை தாக்கல் செய்யப்பட்ட தணிக்கை அறிக்கையில் இது குறித்து கூறப்பட்டிருப்பதாவது:

மார்ச் 2011 வரை திமுக ஆட்சியில் தொழில், வணிகம், கல்வி நிறுவனங்களுக்காக ரூ. 189.89 கோடி மதிப்புள்ள 6772.54 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்களில் பெட்ரோல் விற்பனை நிலையம், தண்ணீர் தொட்டி, கல்வி நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. கோவை, ஈரோடு, காஞ்சிபுரம், கரூர், நாகை, நாமக்கல், நீலகிரி உள்ளிட்ட 18 மாவட்டங்களில் உள்ள 49 வட்டங்களில் 7,065 ஏக்கர் நீர்நிலை நிலங்கள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக ஆக்கிரமிப்பில் உள்ளனர். இதன் மதிப்பு 2010 ஜூன் நிலவரப்படி ரூ. 901.76 கோடியாகும்.

கோவை, காஞ்சிபுரம், மதுரை, நீலகிரி, சேலம், தேனி, தூத்துக்குடி, நெல்லை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் தடையாணை புத்தகப் பதிவேடுகளை ஆய்வு செய்ததில் ரூ. 129.12 கோடி மதிப்புள்ள 685.70 ஏக்கர் நிலங்கள் நிறுவனங்கள், மன்றங்கள் மற்றும் தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ரூ. 7.56 கோடி பூமி தான நிலம் ஆக்கிரமிப்பு: அரவக்குறிச்சி, கோவை வடக்கு, கடலூர், மணப்பாறை, மேட்டூர், ஓமலூர்,

### நில ஆக்கிரமிப்பு

பெருந்துறை, ராமநாதபுரம், சேலம், ஸ்ரீபெரும்புதூர், சூலூர், திருச்செந்தூர் ஆகிய வட்டங்களில் 1956 லிருந்து 1984 வரை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்பட்ட 88.64 ஏக்கர் நிலங்கள் வேறு நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 2010 ஜூன் 30ம் தேதி நிலவரப்படி ரூ. 7.56 கோடியாகும்.

நில ஒப்படைப்பு மற்றும் குத்தகை நிபந்தனைகளை மீறியதற்காக அரசு நிலங்களை திரும்பப் பெறாததால் ரூ.14.30 கோடி மதிப்புள்ள அரசு நிலங்கள் சட்டத்தை மீறியவர்களிடமே உள்ளது.கால தாமதத்தால் ரூ. 440 கோடி வசூல் இல்லை: குத்தகையைப் புதுப்பிக்காதது, குத்தகை வாடகையை மாற்றி அமைக்காதது ஆகியவற்றால் ரூ. 39.69 கோடிக்கு குத்தகை வாடகை பெறப்படவில்லை.

நுழைவு அனுமதி அளித்த பிறகும் அரசு நிலங்களை உரிமை மாற்றம் செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தால் நிலத்தின் விலையான ரூ. 440.79 கோடி வசூலிக்கப்படவில்லை. நிலம் குறித்த தகவல் அரசிடம் இல்லை: விலை மதிப்பற்ற சொத்தான நிலங்கள் பற்றிய தகவல்கள் அரசிடம் இல்லை என்பது தணிக்கையில் தெரியவந்துள்ளது. அரசின் உத்தரவுகள் பின்பற்றப் படவில்லை என்பதும் ஆக்கிரமிப்புகளை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்பதும் தணிக்கையில் தெரிய வந்துள்ளதாக தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தொடரும் தி.மு.க. ரவுடிகளின் அட்டகாசம்...

## ஏழைப்பெண்களை அடித்து நொறுக்கும் கொடூர வீடியோ:

■ ஏஷ்யாநெட் நியூஸ் தமிழ்
26.02.2019

புதுக்கோட்டை, மாவட்டம் திருமயம், பைரவர் கோவில் முன் பெட்டிக் கடையை நடத்தி வருகிறார் கவுரி, தி.மு.க. ஒன்றிய செயலாளர் சரவணனிடம் இவர் சிறிய அளவு பணம் பெற்றிருந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் இதனை கேட்டு சில ரவுடிகளையும் உடன் அழைத்து வந்துள்ளார் சரவணன்.

இது தொடர்பாக வெளியாகியுள்ள வீடியோவில் சரவணன் நான்கு பேர் கொண்ட ரவுடி கும்பலுடன் பெட்டிக்கடைக்கு முன் வந்து சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார். மூன்று பெண்கள் மட்டுமே இருந்த அந்தக் கடைக்கு முன் நின்று கெட்ட வார்த்தைகளால் அர்ச்சித்துக் கொண்டிருந்த தி.மு.க. ரவுடிகள் பெட்டிக் கடையில் இருந்த பாட்டில்களை கீழே போட்டு உடைத்து அராஜகத்தில் ஈடுபடுகின்றனர். இதனை தடுக்க முயன்ற வாசுகி, கவுரி ஆகியோரை

### அராஜகம்

பெண்களென்றும் பாராமல் அடித்து நொறுக்குகின்றனர். வலி தாங்க முடியாத அந்த ஏழைப்பெண்கள் அலறித் துடிக்கின்றனர். இந்த வீடியோ பார்ப்பவர்களை கலங் கடிக்கிறது. இந்த வீடியோ வைரலாக பரவி வருகிறது. எப்பேர்பட்ட ஆளாக இருந்தாலும் பெண்களை தாக்குவது பெரும் குற்றம் என தி.மு.க. ஒன்றிய செயலாளர் மீது கடுப்பாகி வருகின்றனர் பொதுமக்கள். தேர்தல் நேரத்தில் இனியும் தமது கட்சியில் உள்ள ரவுடிகளை அடக்கி அவர்கள் மீது கடும் நடவடிக்கைகளை மு.க.ஸ்டாலின் எடுக்காவிட்டால், அதன் விளைவை தி.மு.க. தேர்தல் சமயங்களில் மொத்தமாக அறுவடை செய்யப்போவது உறுதி என்கிறார்கள் பொதுமக்கள்.

கனிமொழி எங்களை அடிபணிய சொன்னாங்க? 2 | 3 நில அபகரிப்பு தி.மு.க. அமைச்சர் கே.என்.நேரு கைது

# இருண்ட காலம்! இருளில் தடுமாறும் மக்கள்

## இந்நிலை மாறுவது எப்போ?

■ தினமலர்
17.04.2011



அன்று, 2 மணி நேரம்; நேற்று, 3 மணி நேரம்; இன்று, 4 மணி நேரம்... என, மின்வெட்டு ஏற்படும் நேரத்தை நீட்டித்துக்கொண்டே போகிறது, மின்(தடை)வாரியம். இப்படியே போனால், "மின் சப்ளை இருக்கும் நேரம், மதியம் 2.00 மணி- 4.00 மணி" என்ற அறிவிப்பு வந்தாலும் வரக்கூடும். தாறுமாறாக ஏற்படும் மின்வெட்டால் மக்கள், தொழில்துறையினர், விவசாயிகள் என பல தரப்பினரும் கொந்தளித்து போயுள்ளனர். தமிழகத்தில் வழக்கமாக கோடை காலத்தில் மட்டும் தினசரி ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் மின்வெட்டு ஏற்படும். அரசு மின் விநியோகம் குறித்து சரியாக திட்டமிடாததால் மின்வெட்டு அதிகரித்தது. குறிப்பாக 2008ம் ஆண்டு முதல் மின்வெட்டு தலைவிரித்து

### மின்வெட்டு

ஆடுகிறது. தென்னிந்தியாவின் மான்செஸ்டரான கோவை மாவட்டத்தில் ஸ்பின்னிங் மில், ஜின்னிங் பேக்டரி, விசைத்தறி, பவுண்டரி, இன்ஜினியரிங் தொழிற்சாலை, கிரைண்டர், மிக்சி உற்பத்தி நிறுவனங்கள், ஆட்டோ மொபைல் மற்றும் இதர உதிரிபாக உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தை தாண்டும்.

இந்நிறுவனங்களில் மின்வெட்டால் உற்பத்தி இழப்பு, ஜெனரேட்டர் பயன்படுத்துவதால் கூடுதல் செலவு, மின்வெட்டுக்கு ஏற்ப தொழிலாளர்களின் வேலை நேரங்களை மாற்றுவதால் ஏற்படும் பாதிப்பு, ஜெனரேட்டருக்கான புதிய முதலீடு என பல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. தினமும் மூன்று மணி நேரம் மின்வெட்டு என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துடன் உயர் அழுத்த மின்சாரம் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் மாலை 6.00 மணி முதல் 10.00 மணி வரை மின்சாரம் பயன்படுத்தக்கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதை தவிர இரவில் இரண்டு முறை தலா அரை மணி நேரமும், பகலிலும் அரை மணி நேரமும் மின்வெட்டு ஏற்படுகிறது.

தினமும் 9 மணி நேரம் மின்சாரம் இல்லாமல் தொழிற்சாலைகள் திணறி வருகின்றன.

விளம்பரத்துக்கு விரயம்: வீடுகளுக்கான மின் சப்ளையில் அடிக்கடி வெட்டு ஏற்பட்டு மக்கள் அவதியுறும் நிலையில், கோவை நகர், புறநகர் பகுதிகளின் முக்கிய சாலைகளில் வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகள் நள்ளிரவு நேரத்திலும் ஒளிருகின்றன; விளம்பர பலகைகளின் எண்ணிக்கை கோவை நகரில் மிக அதிகம். மக்கள் நடமாட்டம் அறவே இல்லாத இரவு நேரத்திலும் விளம்பர பலகைகள் அதிகளவு மின்சாரத்தை குடித்தவாறு ஒளிருகின்றன. அதே வேளையில், பல பகுதிகள் மின் சப்ளையின்றி இருளில் மூழ்கி கிடக்கின்றன.

மின்வெட்டு வாசகர் கருத்து 4

# மீத்தேன் ஆய்வு! தி.மு.க. அரசுடன் தனியார் நிறுவனம் ஒப்பந்தம்

■ தினமணி
நாள் : 05.01.2011



மன்னார்குடி பகுதியில் உள்ள நிலக்கரி படுகைகளில் மீத்தேன் வாயு இருப்பு பகுதியை ஆய்வு செய்வதற்கான உதவிகளை தமிழக அரசு, தனியார் நிறுவனத்துக்கு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செவ்வாய்க்கிழமை கையெழுத்தானது.

புனித ஜார்ஜ் கோட்டையில், இதற்கான ஒப்பந்தத்தில் தமிழக அரசின் தொழில் துறை செயலாளர் ராஜீவ் ரஞ்சன், கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் யோகேந்திர குமார் மோடி ஆகியோர் கையெழுத்திட்டனர். துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. மன்னார்குடி பகுதியில் உள்ள நிலக்கரி படுகைகளில் மீத்தேன் வாயு இருப்புப் பகுதியை ஆய்வு செய்து உற்பத்தி செய்வதற்கான அனுமதியை கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன் நிறுவனத்துக்கு இந்திய அரசு அளித்துள்ளது.

### மீத்தேன்

மீத்தேன் வாயு உற்பத்தியாகக் கூடிய சாத்தியக் கூறுகள் உறுதியானவுடன் தொடக்க கட்ட ஆய்வுகளுக்காக, ரூ.100 கோடியை இந்த நிறுவனம் முதலீடு செய்ய உள்ளது.

இந்த நிறுவனம் வணிக ரீதியில் மேலும் ரூ.3,500 கோடியை இந்தத் திட்டத்தில் முதலீடு செய்யவும் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் அழுத்தமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு தமிழகத்துக்கு கிடைக்கும்.

இதுதவிர, ராயல்டி, மதிப்பு கூட்டிய வரி ஆகிய வகையில் தமிழகத்துக்கு வருவாய் கிடைக்கும். இந்த நிறுவனத்துக்கு மாநில அரசின் பெட்ரோலிய ஆய்வாராட்சி உரிமம் கொடுத்து இருப்பதோடு, இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படத் தேவையான ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகள் கிடைப்பதற்கும் உதவிசெய்யும் என்று தமிழக அரசின் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# என் குடும்பத்தில் என் மகன் உட்பட இனி யாரும் அரசியலுக்கு வரமாட்டார்கள்: மு.க.ஸ்டாலின்

## தி.மு.க. குடும்ப அரசியல் செய்யவில்லை



■ மாலை மலர்
நாள் : 09.05.2016

**தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் சன் தொலைக்காட்சியில் நேயர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்தார்.**

**கே:** உங்கள் குடும்பத்தில் இருந்து இன்னும் யாராவது அரசியலுக்கு வருவதற்கு வாய்ப்புகள் உள்ளதா?

**ப:** என்னுடைய மகனாக இருந்தாலும் சரி, என்னுடைய மருமகனாக இருந்தாலும் சரி, என்னுடைய குடும்பத்தில் வேறு யாராக இருந்தாலும் அரசியலுக்கு நிச்சயமாக வர மாட்டார்கள் என்பதை அழுத்தம் திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**கே:** தேர்தல் அறிக்கையில் நீங்கள் பூரண மது விலக்கு கொண்டு வருவோம் என்று சொல்லி இருக்கின்றீர்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அரசுக்கு வருமானம் இல்லை என்று மீண்டும் மதுக்கடைகளை திறக்க மாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம்?

**ப:** தி.மு.க.வை பொறுத்த வரையில் எப்போதும், "சொன்னதைத்தான் செய்யும், செய்வதைத்தான் சொல்லும்". பெண்களுடைய பாதுகாப்பிற்காக, தமிழர்களின் கலாச்சாரத்தை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக தி.மு.க. தேர்தல் அறிக்கையில் மதுவிலக்கு அமுல்படுத்துவோம் என்று தெளிவாக குறிப்பிட்டு காட்டி இருக்கின்றோம்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறினார்.

# உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கத்தில் போட்டி மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

## தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடுகிறார்.



■ நியூஸ் 18 தமிழ்
நாள் : 13.03.2021

தி.மு.க. கூட்டணி கட்சிகளுடனான தொகுதி பங்கீடு நேற்றுடன் நிறைவடைந்திருக்கும் நிலையில் இன்று திமுக போட்டியிடும் 173 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அதில் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் நடிகரும் தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் போட்டியிட உள்ளார்.

சேப்பாக்கம் தொகுதியில் தான் போட்டியிட உதயநிதி ஸ்டாலின் விருப்பமனு அளித்த போதே அவருக்கு அத்தொகுதி ஒதுக்கப்படும் என அரசியல் நோக்கர்கள் கருதினர்.

முன்னதாக அத்தொகுதியில் யார் போட்டியிட்டாலும் அவரை வெற்றி பெறச் செய்வதே என் இலக்கு என்றும் தனக்கு வாய்ப்பளித்தால் நிச்சயம் வெற்றி பெறுவேன் என்றும் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் முதல் முறையாக சட்டப்பேரவைத் தேர்தலில் சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டதை அடுத்து தி.மு.க. தலைமை அலுவலகத்தில் அக்கட்சியினர் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

# உண்மையில் நீட் தேர்வை கொண்டு வந்தது யார்?

## தும்பை விட்டு வாலைப்பிடிக்கும் தி.மு.க.!

### அப்போது விட்டுவிட்டு இன்னும் 8 மாதங்களில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்கிறார் மு.க.ஸ்டாலின்



■ ஏஷ்யாநெட் நியூஸ் தமிழ்
14.09.2020

நீட் தேர்வை கொண்டுவர காங்கிரஸ் கட்சிக்கு துணைபோனது தி.மு.க. அப்போது மத்திய ஆட்சியில் இருந்தது காங்கிரஸ். கருணாநிதி சொன்னால் பிரதமரே கேட்பார் என பெருமை பேசிக்கொள்ளும்

### நீட் தேர்வு

திமுக, மைனாரிட்டி அரசான காங்கிரஸ் கட்சிக்கு அழுத்தம் கொடுத்து நீட் தேர்வை ரத்து செய்து இருக்கலாம்.

18.07.2013 ம் தேதி நீட் தேர்வே வேண்டாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பை பெற்றுக் கொடுத்தவர் ஜெயலலிதா. அதன்பிறகு அந்த உத்தரவை எதிர்த்து மறுபரிசீலனைக்கு உச்சநீதிமன்றத்தை நாடியது மத்தியில் ஆண்ட காங்கிரஸ். அதிமுக ஒருபோதும் நீட் தேர்வை விரும்பவில்லை. நீட் முதன்முதலில் நடத்தப்பட்டது 2016-17 ஆம் ஆண்டு. அப்போது தமிழ்நாட்டுக்கு ஆளும் அதிமுக அரசு எடுத்த நடவடிக்கைகளால் விலக்கு கிடைத்தது. 2017 பிப்ரவரியில், தமிழ்நாட்டை நீட்டில் இருந்து நிரந்தரமாக விலக்குவதற்கு இரண்டு மசோதாக்களை அதிமுக அரசு அறிமுகப்படுத்தியது. அது ஜனாதிபதி ஒப்புதலுக்காகவும் அனுப்பப்பட்டது.

இதற்கிடையில், நீட் தேர்வு 2017ல் நடத்தப்பட்டது. 2017–18 ஆம் ஆண்டில், ஸ்டேட் ஃபோர்டு மாணவர்களுக்கு 85% இடங்களை ஒதுக்கி, அதிமுக அரசு உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை சென்னை உயர் நீதிமன்றம் நிராகரித்தது. டிவிசன் பெஞ்ச் முன் மேல்முறையீட்டில், சென்னை உயர் நீதிமன்றம் மீண்டும் அதை நிராகரித்தது.

திமுகவின் கூட்டணி கட்சியான காங்கிரஸின் மூத்த தலைவர் ப.சிதம்பரம் மனைவி நளினி சிதம்பரம் உச்ச நீதிமன்றத்தில் வாதிட்டு நீட் தேர்வு அவசியம் என்ற தீர்ப்பை பெற்று கொடுத்தார். ஆனால் இன்று நீட் தேர்வுக்கு முழுக்க முழுக்க அதிமுக அரசு தான் காரணம் என திமுகவும் அதன் கூட்டணி கட்சிகளும் குற்றம் கூறி அரசியல் நடத்தி வருவது தான் வேடிக்கையாக உள்ளது.

தமிழக மாணவர்கள் மீது அக்கறை உள்ள அரசாக திமுக செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்பட்டு இருந்தால் இந்த நீட் தேர்வால் தற்கொலை நடந்திருக்காது. நீட் தேர்வே நடந்திருக்காது. அப்போது விட்டுவிட்டு இன்னும் 8 மாதங்களில் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்கிறார் மு.க.ஸ்டாலின். முன்னாள் அமைச்சரும், திமுக எம்.எல்.ஏ.,வுமான கே.என்.நேருவோ, தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வில் மாணவர்கள் காப்பி அடிக்க அனுமதி வழங்கப்படும் என்கிறார்.

இப்பக்கங்களில் இடம்பெற்றுள்ள செய்திகள் யாவும் பல்வேறு செய்தித்தாள்களிலும், இணையம் செய்தித் தளங்களிலும், தொலைக்காட்சிகளிலும் வெளியிடப்பட்டவையே, எதுவும் கற்பனை அல்ல!

இந்தியன் எக்ஸ்பிரஸ் 11.11.2010

# ரூ.1760000000000

■ நியூஸ் 18
நாள் : 09.05.2016
மொழிபெயர்ப்பு

## நாட்டிற்கு பேரிழப்பு !

சுதந்திர இந்தியாவின் மாபெரும் ஊழல் என இந்த ஊழல் வர்ணிக்கப்படுகிறது. உலகளவில் நடந்த அதிகார துஷ்பிரயோகம் சார்ந்த ஊழல்களில் அமெரிக்காவில் நடந்த வாட்டர்கேட் ஊழலுக்கு அடுத்து நடந்த பிரம்மாண்ட ஊழல் என 2ஜி ஊழலை டைம்ஸ் நிறுவனம் குறிப்பிடுகிறது.

சரியாகபத்து ஆண்டுகளுக்கு முன்பு, டெல்லியின் அதிகார மையங்களில் முதன்முறையாக இந்த முறைகேடுகள் பற்றி முணுமுணுக்கப்பட்ட நிலையில், எதிர்க்கட்சிகள் இது குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கூச்சலிட ஆரம்பித்தன.

இரண்டாம் தலைமுறை அல்லது 2ஜி அலைக்கற்றை உரிமங்களைத் தனியார் அலைபேசி நிறுவனங்களுக்கு ஒதுக்குவதில் நடந்த முறைகேடுகள் என்பது வெகுஜன அறிவுக்குச் சற்றே அப்பாற்பட்டதாக இருப்பதால் எளிமையாக என்ன நடந்தது என்பதை ஆராய்வோம்.

அன்று இந்தியாவின் தலைமை கணக்கு தணிக்கையாளர் நடைபெற்றிருந்த முறைகேடுகளால் ரூ.1.76லட்சம் கோடி மதிப்பிலான இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டபோது தான் இந்த ஊழல் பெரும் அளவு வெளிச்சத்துக்கு வந்தது.

இதையடுத்து மத்திய புலனாய்வு நிறுவனம் இது



குறித்து விசாரணையை முடுக்கி நீதிமன்றத்துக்கு முன்பு 80,000 பக்கங்கள் கொண்ட அறிக்கையை சமர்ப்பித்தது.

நவம்பர் 16, 2010 அன்று இந்தியாவின் தலைமை கணக்கு தணிக்கையாளர், 2 ஜி அலைக்கற்றைகளுக்கான உரிமங்களை ஒதுக்கும் நடவடிக்கையில் தொலைத் தொடர்புத் துறையில் முறைகேடுகள் நடந்துள்ளதாகத் தெரிவித்தார்.

அன்றைய தலைமை கணக்கு தணிக்கையாளராக இருந்த வினோத் ராயின்

### 2ஜி ஸ்பெக்ட்ரம்

அறிக்கையின்படி, தொலைப் பேசி நிறுவனங்களுக்கு முறையற்ற வழியில் உரிமைகள் வழங்கியதால், நாட்டுக்கு ரூ.1.76 லட்சம் கோடி முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறினார்.

மேலும், தகுதியில்லாத விண்ணப்பதாரர்களுக்குக் கூட முறையற்ற ஆதாரங்கள், ஆவணங்கள் அடிப்படையில் அலைக்கற்றை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி உரிமங்களைப் பெற்ற நிறுவனங்கள் பலவும் குறைந்த கால இடைவேளையிலேயே வெளிநாட்டு நிறுவனங்கள் பலவற்றுக்கும் தங்கள் நிறுவனத்தின் பங்குகளை பெரும் தொகைக்கு விற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குறைந்த கால இடைவேளையில் விற்கப்பட்ட பங்குகளில் மதிப்பீட்டுத் தொகையே முறையான உரிமத் தொகையாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நியாயமான, வெளிப்படையான முறையில் இந்த உரிமங்களை வழங்கியிருந்தால் பெரும் லாபம் பொதுத்துறை நிறுவனத்துக்குக் கிடைத்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

### குற்றச்சாட்டுகள்

மத்திய மந்திரி ஆ.ராசாவின் தலைமையிலான தொலைத்தொடர்பு அமைச்சகம், உரிமத்துக்கான ஏலம் நடந்துகொண்டிருந்தபோது பலமுறை விதிகளையும் தகுதிக்கான அடிப்படைகளையும் மாற்றிக்கொண்டே இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. ஏலத்தின் கடைசி தேதி மாற்றப்பட்டுக் குறுகிய காலத்துக்குள் ஏலம் முடிவடைவது போல அமைச்சகம் அறிக்கையை வெளியிட்டது.

ஏலமானது உரிமத்தொகை அடிப்படையில் நடைபெறாமல் 2001 ஆம் ஆண்டுக்கான உரிமத்தொகை மதிப்பில் முதல் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற முறையில் வழங்கப்பட்டதும் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. மேலும் அமைச்சகத்திலிருந்த சில அதிகாரிகள் வேண்டுமென்றே சில தனியார் நிறுவனங்களின் பங்கேற்புகளைத் தடுத்து நிறுத்த முற்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.

டிராய் நிறுவனம், சட்ட அமைச்சகம், நிதி அமைச்சகத்தின் பரிந்துரைகளைத் தொலைத்தொடர்பு மந்திரி ஆ.ராசா புறக்கணித்துள்ளதாகவும் குற்றம் சுமத்தப்படுகிறது.

## மீண்டும் துவங்கியது 2ஜி வழக்கு விசாரணை

■ தி இந்து
நாள் : 15.01.2021
மொழிபெயர்ப்பு

ஜனவரி 14 ஆம் தேதி சிபிஐ உயர் நீதிமன்றத்தில் 2 ஜி மோசடி வழக்கில் கைதான ஏ.ராஜா உள்ளிட்டோர் மீது வழக்கு ஒன்றை பதிவு செய்துள்ளது, எதிர் தரப்பில் இருந்து ஆஜரான விஜய் அகர்வால், இந்த வழக்கின் வாதங்களை உள்ளடக்கிய 6500 பக்கம் கொண்ட குற்றப்பத்திரிகையை விசாரணைக்கு முன் சமர்பிக்க முயன்றார். ஆனால் அவரிடம் அது டிஜிட்டல் வடிவில் இல்லாததால் அவரால் சமர்பிக்க இயலவில்லை. இதனால் வழக்கு ஜனவரி 15 தேதி தொடரும் என்று ஆணையிட்டார். இதற்கு முன் இந்த வழக்கானது நீதிபதி பிரிஜேஷ் சேத்தி அவர்களால் தினமும் விசாரிக்கப்பட்டுவந்தது. மேலும் இந்த வழக்குக் குறித்து விசாரிக்கப்பட்ட ஆவணங்களை நவம்பர் 23,2020 ஆம் தேதி வெளியிட்டார். இதையடுத்து சிறப்பு நீதிமன்றம் டிசம்பர் 21, 2017 அன்று ராஜா, கனிமொழி, திமுக தலைவர் எம். கருணாநிதியின் மனைவி தயாலு அம்மால், வினோத் கோயங்கா, ஆசிப் பால்வா, கரீம் மோரானி, பி. அமிர்தம் மற்றும் ஷரத் குமார் உள்ளிட்ட 19 குற்றவாளிகளை சிறப்பு நீதிமன்றம் விடுவித்தது.குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுவிக்கும் சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து மார்ச் 19, 2018 அன்று, உயர் நீதிமன்றத்தை ED அணுகியது.ஒரு நாள் கழித்து, சிபிஐயும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பதை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது.

## ஆ. ராசாவின் கூட்டாளி சாதிக் பாட்சா தற்கொலை செய்து கொண்டார்

■ தினமணி
17.03.2011



பெரம்பலூரைச் சேர்ந்தவரான சாதிக் பாட்சா, சென்னை தியாகராய நகரில் கிரீன் ஹவுஸ் புரமோட்டர்ஸ் என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் நிர்வாக இயக்குநராக இருந்து வந்தார். இவரது மனைவி ரஹானா பானு. இவர்களுக்கு அதின் என்ற மகனும், அசின் என்ற மகளும் உள்ளனர்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் சிக்கியுள்ள முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. ராசா வின் நெருங்கிய நண்பர் என்பதால் ஸ்பெக்ட்ரம் ஊழல் பணம் இந்த நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டதா என சிபிஐ அதிகாரிகளுக்கு சந்தேகம் எழுந்தது. அப்போது, சென்னை தேனாம்பேட்டையில் உள்ள சாதிக் பாட்சாவின் வீட்டிலும் சோதனை நடந்தது. இதன் பின்னர் 2 முறை சாதிக் பாட்சாவை தில்லிக்கு அழைத்து சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இந்த நிலையில், விசாரணைக்காக புதன்கிழமை பிற்பகலில்

### 2ஜி ஸ்பெக்ட்ரம்

தில்லியில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் ஆஜராகுமாறு சாதிக் பாட்சாவுக்கு சம்மன் அனுப்பப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இதற்காக புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விமானம் மூலம் தில்லிக்கு செல்ல சாதிக் பாட்சா திட்டமிட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.அப்போது, தேனாம் பேட்டை வீட்டில் இருந்த சாதிக்பாட்சா காலை 9 மணி அளவில் குளிப்பதற்காக படுக்கை அறைக்கு சென்றாராம்.

குளிப்பதற்குச் சென்ற சாதிக்பாட்சா நீண்ட நேரமாகியும் வெளியில் வராததால், படுக்கை அறையின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனராம். அங்கு, தூக்கில் தொங்கிய நிலையில் சாதிக்பாட்சா இருந்தார்.

## கருணாநிதியை நம்பி கொத்து கொத்தா மடிந்த இலங்கை தமிழர்கள் !

### இலங்கை தமிழர்களுக்கு கருணாநிதி செய்த துரோகம்



■ கதிர் நியூஸ்
13.03.2019

2016 சட்டசபை தேர்தல் பிரசார பொதுகூட்டத்தில் மறைந்த முதல்வர் ஜெயலலிதா பேசியதாவது: கபட நாடகங்களை ஆடி இலங்கை தமிழருக்கு தி.மு.க. துரோகம் இழைத்துள்ளது.

ஆட்சிக்கு வருவதற்கு முன் 2006ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் 'ஈழத் தமிழர்கள் அமைதி நிறைந்த நல்வாழ்வுரிமை பெறுவதற்கு வழி காண உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்' என தி.மு.க. வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் அவர்கள் செய்தது என்னவோ இதற்கு எதிர்மறையான செயல்களைத் தான்.

தி.மு.க. அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய ஆட்சி 2004 முதல் மத்தியிலே நடைபெற்று வந்தது. இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் போர்வையில் தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

"பிரதமருக்கு தந்தி", "நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா"என்ற வெற்று அறிவிப்புகளுடன் ராஜினாமாக்

### ஈழம்



கடிதங்களை தானே பெற்று வைத்துக் கொண்டது; இறுதி எச்சரிக்கை" என்ற அறிவிப்பு என பல்வேறு நாடகங்களை நடத்தியது. இறுதி நாடகமாக போர் நிறுத்தம் ஏற்படும் வரை உண்ணாவிரதம்" என்று அறிவித்து கடற்கரையில் 3 மணி நேரத்திற்கும் குறைவாக படுத்துக் கொண்டு உண்ணாவிரத நாடகத்தை முடித்துக் கொண்டார். அவ்வாறு முடிக்கும் போது,"விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு முடித்துக் கொண்டு விட்டது" என்ற செய்தியை ஊடகங்களுக்கு தெரிவித்தார் திரு. கருணாநிதி. போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டது என்று இவரது பேச்சைக் கேட்டு பதுங்கு குழிகளில் பதுங்கியிருந்த அப்பாவி இலங்கைத் தமிழர்கள் வெளியே வந்தனர். அடுத்த நிமிடமே இலங்கை இராணுவத்தால் கொத்து கொத்தாக சுட்டுக் கொலை செய்யப்பட்டனர் என்றும் மறைந்த முதல்வர் ஜெயலலிதா திருச்சி கூட்டத்தில் கூறினார். 3 மணி நேரத்தில் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்ட திரு. கருணாநிதி, இலங்கையில் தமிழர்களின் மீதான போரை நிறுத்தி விட்டதாக மத்திய அரசு தனக்கு தெரியப்படுத்தியதாகவும், தான் காங்கிரஸ்காரர்களால் அவ்வாறு ஏமாற்றப்பட்டு விட்டதாகவும் சொல்லி வந்தார்.

## கனிமொழி எங்களை அடிபணிய சொன்னாங்க

### விடுதலைப்புலி சசிதரன் மனைவியின் ஒப்புதல் வாக்குமூலம்

■ இமயம் டிவி
அனந்தி சசிதரன்



விடுதலைப்புலி சசிதரனின் மனைவி ஆனந்தி சசிதரன் இமயம் தொலைக்காட்சியில் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது.

எங்களுடைய போர் நிறுத்த வழக்குகள் இன்றுவரை நீதிமன்றத்தால் விசாரிக்கப்படவில்லை. அந்த வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டு இருக்கின்றது. இது தொடர்பாக அந்தக்கால உங்களுடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதி ஐயா அவர்களின் மகள் கனிமொழியும் இது தொடர்பாக சரணடையுங்கள், நாங்கள் உங்களை விடுவிக்கிறோம், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்றோம் என்று வாக்குறுதி அளித்தார். அந்தப் பெண்மணி கூட இன்று மிகவும் மௌனமாக இருப்பது நயவஞ்சகமான முறையில் எங்களை அந்த வலையில் வீழ்த்தி விட்டார்கள் என்பது என்னுடைய கருத்து மட்டுமல்ல என் போன்ற பல போராளிகளுடைய மனைவி குடும்பங்களினுடைய கருத்து இதுவாக இருக்கின்றது.

தொகுப்பாளர்:

திருமதி.அனந்தி சசிதரன் இதற்கு முன்னாடி பேசும்பொழுது தமிழ் உறவுகள் சீரழிக்கப்பட்டது குறித்தும் இலங்கையில் கடுமையான மனித உரிமை மீறப்படுகிறது, மனித உயிர்களை காவு கொள்கிற அளவிற்கு பல சிறை கொடுமைகள் இருப்பதாக நீங்கள் சொன்னீர்கள். இப்படி பல லட்சம் மக்கள் பல ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் போனார்கள் என்ற பதிவோடு உங்களுடைய கணவர் சசிதரன் திரிகோணமலையில் விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் கள போராளியாக இருந்தார்.

### ஈழம்

அவரோடு சேர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஒப்படைக்கப்பட்டு ஒரு சூழ்நிலையில் அவர்களுடைய கதி என்ன என்ற ஒரு கேள்வி, அவர் திரும்பி வருவார் என்ற நம்பிக்கை இருக்கிறதா ?

நான் இறுதிநேர போரின் முடிவில் நான் உண்மையில் அந்தப் போர் நிலவரம் பற்றி கூறுவதாக இருந்தால் அந்த 18ம் தேதி நாங்கள் கணித்த நாளுக்கு சுமார் 10 நாளுக்கு முன்னதாகவே விடுதலைப்புலிகளினுடைய போர் ஓய்ந்து விட்டது என்று தான் கூற வேண்டும்.

நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம் அமெரிக்க அரசாங்கம் வருகின்றது, வரக்கூடிய ஒரு சூழலும் இருந்தது ஆனால் அது இந்திய அரசாங்கத்தினுடைய தலையிட்டால் அந்த நிகழ்வு முழுவதுமாக அழிக்கப்பட்டு விட்டது.

## மின்கட்டணத்தை குறைக்க போராடியவர்களை கொன்று குவித்த தி.மு.க. ஆட்சி...

■ கதிர் நியூஸ்
09.12.2020

### பிச்சைக்காரர்களின் போராட்டம் என்று பேசிய கருணாநிதி.!

1970 மே 9 ஆம் தேதி பல்லாயிரக்கணக்கான மாட்டு வண்டிகள் மற்றும் டிராக்டர்களில் பெரும் பேரணியாக நடந்து, கட்டை வண்டிப் போராட்டம் என்று கோவை நகரையும் மற்ற தமிழக நகரங்களையும் திக்குமுக்காடச் செய்தனர் அன்றைய விவசாயிகள்.

உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தைத் திரும்பப் பெறாவிட்டால், ஜூன் 15ம் தேதி அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டமும், ஜூன் 19ம் தேதி முழு அடைப்பும் நடத்தப்படும் என்று விவசாயிகள் அறிவித்தனர்.

போராட்டம் உச்சத்தில் இருந்த போது கருணாநிதி அரசு போலீசாரை கொண்டு

### போராட்டம்

துப்பாக்கியால் விவசாயிகளை சுட்டது. இதில் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த ராமசாமிகவுண்டர், மாரப்ப கவுண்டர், ஆயிக்கவுண்டர் உள்ளிட்ட விவசாயிகள் தனது இன்னுயிரை நீத்தனர்.

இதற்கு முழு காரணமும் கருணாநிதித்தான் என்று விவசாயிகள் குற்றம்சாட்டினர். இந்த இறப்புக்கு முதலமைச்சராக இருந்த கருணாநிதி விவசாயிகளின் மரணத்தை பத்திரிகையாளரிடம் கொச்சைப் படுத்தி பேசியிருந்தார்.

துப்பாக்கியிலிருந்து தோட்டா வராமல் மலர்களா வரும் என்று பேட்டி கொடுத்தார்.

மேலும் பிச்சைக்காரர்களின் போராட்டம் என கூறியிருந்தார். விவசாயிகளின் மரணத்தை தொடர்ந்து விவசாயிகளின் போராட்டம் உச்சநிலைக்கு சென்றது. இதனால் செய்வதறியாமல் யூனிட்டுக்கு 1 பைசா மின்கட்டணத்தை குறைத்தார் கருணாநிதி.

காயங்கள் ஆறுவதற்கு முன்பாகவே மாநில அரசு மீண்டும் மின்சாரக் கட்டணத்தை 9 பைசாவிலிருந்து 12 பைசாவுக்கு உயர்த்தி, 01.01.1972 முதல் புதிய கட்டணத்தை அமல்படுத்த உத்தரவிட்டது.

## கே.என். நேருவின் ஆடம்பரத்தால் அரசுக்கு பல கோடி இழப்பு

■ தினத்தந்தி
10.09.2011

### செந்தில்பாலாஜி குற்றச்சாட்டு

சட்டசபையில் அமைச்சர் செந்தில்பாலாஜி பேசியதாவது

தி.மு.க. ஆட்சி வரும் போதெல்லாம் போக்குவரத்து துறை நஷ்டத்தில் இயங்கும் 91–96 அ.தி.மு.க. ஆட்சியில் ரூபாய் 142 கோடி லாபம் வந்தது. 96–2001 தி.மு.க. ஆட்சியில் ரூ. 674 கோடி நஷ்டம் ஏற்பட்டது. 2001–2006 அ.தி.மு.க. ஆட்சியில் 61 கோடி லாபம் வந்தது. 2006–2011 தி.மு.க. ஆட்சியில் ரூ. 1905 கோடி ரொக்கம் நஷ்டம் ஏற்பட்டது.

இதில் போக்குவரத்து துறை அமைச்சரான கே .என்.நேரு இருந்தபோது அவரும் அவரது கட்சியினரும் போக்குவரத்து துறை வருமானத்தை மறைமுகமாக அவர்களின் சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்தி வந்துள்ளனர்.


### குற்றச்சாட்டு

புரட்சித்தலைவி ஆட்சியில் 90 சதவீத பஸ்கள் சாதாரண பஸ்கள் இயக்கப்பட்டது. கருணாநிதி ஆட்சியில் கலர் பெயிண்ட் அடித்து பலவகை பெயர்களில் பஸ்கள் இயக்கினர். போக்குவரத்து துறை வருமானத்தை கே.என். நேரு தனது மனைவி உறவினர்கள் தேவைக்கு பயன்படுத்தி இருக்கிறார்கள். ஸ்கார்பியோ, பொலிரோ, போன்ற 17 சொகுசு கார்கள் வாங்கி அவரும் மற்றவர்களும் பயன்படுத்தி உள்ளனர்.

இதில் அழகிரிக்கு ஒரு கார், பொன்முடிக்கு ஒரு கார், ஐ.பெரியசாமிக்கு ஒரு கார், ஆற்காடு வீராசாமிக்கு 2 கார், முன்னாள் துணை சபாநாயகருக்கு ஒரு கார், கே.என். நேருவுக்கு மட்டும் 8 சொகுசு கார்.

உயிரை பணயம் வைத்து வேலை செய்யும் தொழிலாளர்கள் பணத்திலும் மக்கள் பணத்திலும் இந்த கார்கள் வாங்கப்பட்டுள்ளது. இதை ஆடம்பர வாழ்க்கைக்கு பயன்படுத்தியுள்ளனர்.நேருவின் தவறான கொள்கை முடிவால் 8 போக்குவரத்து கழகங்கள் தள்ளாடின.

## குடிப்பழக்கம் அதிகரிக்க கருணாநிதியே காரணம்: ஏ.வ.வேலு



■ அண்ணா நாளிதழ்

### சட்டசபையில் பகிரங்க பேச்சு


சட்டசபையில் ஆயத் தீர்வை, மாநில நிர்வாக மானிய கோரிக்கை மீது கழக உறுப்பினர் தண்டராம்பட்டு ஏ.வ. வேலு பேசுகையில் கூறியதாவது.

### குடிப்பழக்கம்

அன்றும் இன்றும் என்றும் மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்பதில் முதல்வர் புரட்சித் தலைவருக்கு செஞ்சிற்றும் எண்ணமில்லை. மதுவிலக்கு சட்டத்தை கடுமையான சட்டத்தை கொண்டுவந்தபோது எதிர்க்கட்சியை ஒடுக்க சட்டம் கொண்டுவருகிறார்கள் என்றார்கள். இந்த சட்டம் கொண்டு வரப்பட்ட போது அதை எதிர்த்து கருணாநிதி வெளிநடப்பு செய்தார். அப்படிப்பட்டவர்கள் கள்ளச் சாராயத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுவது ஆச்சரியமாக இருக்கிறது.

**கள்ளச்சாராயம் கருணாநிதியே காரணம்:**

தமிழகத்தில் திருட்டுச் சாராயம் காய்ச்ச வழி வகுத்தவர் யார்? சாராய கடைகளை திறந்தவர் யார்? மூதறிஞர் ராஜாஜி நேரடியாக கேட்டுக்கொண்டும், ஏற்றுக் கொள்ளாமல் தமிழகத்தில் சாராயக் கடைகளைத் திறந்தார். கள்ளச்சாராயம் காய்ச்சுவது குடிப்பவர்கள் பெருகுவதற்கும் கருணாநிதியே காரணம் இந்த அரசு எதை செய்தாலும் அதை குறை கூறிக் கொண்டே இருக்கிறார். இவ்வாறு ஏ.வ.வேலு பேசினார்.




இப்பக்கங்களில் இடம்பெற்றுள்ள செய்திகள் யாவும் பல்வேறு செய்தித்தாள்களிலும், இணையம் செய்தித் தளங்களிலும், தொலைக்காட்சிகளிலும் வெளியிடப்பட்டவையே, எதுவும் கற்பனை அல்ல!

# தி.மு.க. உட்கட்சி மோதலில் தா.கிருட்டிணன் வெட்டிக் கொலை

■ தினபூமி
21.05.2003

மதுரை, மே:21 முன்னாள் தி.மு.க. அமைச்சர் தா.கிருட்டிணன் நேற்றுக் காலை மதுரையில் உள்ள அவரது வீட்டுக்கு அருகே வெட்டிப்படுகொலை செய்யப்பட்டார். வாக்கிங் சென்றுவிட்டு திரும்பி வரும் போது மோட்டார் சைக்கிளில் வந்த 2 பேர் கொண்ட கும்பல் வெட்டிச் சாய்த்துவிட்டு தப்பி ஓடிவிட்டது.

தமிழக நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் முன்னாள் அமைச்சராக இருந்தவர் பசும்பொன் தா.கிருட்டிணன் (வயது 66). தி.மு.க.வைச் சேர்ந்த இவர் கருணாநிதியின் மகன் ஸ்டாலினின் தீவிர ஆதரவாளர். இவர் தற்போது மதுரை கே.கே.நகரில் உள்ள தனது சொந்த வீட்டில் மனைவி பத்மாவதி, தம்பி மகன் நெடுஞ்செழியன் ஆகியோருடன் வசித்து வந்தார்.

இவர் தினமும் அதிகாலையில் எழுந்து வாக்கிங் சென்று வருவதை வழக்கமாக வைத்திருந்தார். நேற்று



அதிகாலை 5 மணி அளவில் எழுந்த தா.கிருட்டிணன் அருகில் உள்ள வண்டியூர் பூங்காவரை வாக்கிங் சென்றுவிட்டு மீண்டும் வீட்டுக்குத் திரும்பினார். அதிகாலை 6.10 மணி அளவில் வீட்டுக்கருகில் வந்த போது ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த 2 மர்ம ஆசாமிகள் தா.கிருட்டிணனை காலால் எட்டி உதைத்தனர். இந்த திடீர் தாக்குதலால் நிலைகுலைந்த அவர் கால் இடறி கீழே விழுந்தார். உடனே அந்த மர்ம ஆசாமிகள் தாங்கள் மறைத்து வைத்திருந்த கத்தி

**படுகொலை**

மற்றும் வீச்சருவாளால் தா.கிருட்டிணனை சரமாரியாக வெட்டி தாக்கினர். இதில் உடலில் பல இடங்களில் காயமடைந்த அவர். சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து அலறியபடி கீழே சாய்ந்தார்.

தினகரன்

# தினகரன் அலுவலகத்தில் குண்டு வீச்சு: மூன்று ஊழியர்கள் பலி

■ நமது எம்.ஜி.ஆர்
10.05.2007

கருணாநிதியின் மகன் மு.க.அழகிரி அறிவிக்கப்படாத கட்சித் தலைவராக அனைத்து அதிகாரங்களையும் பெற்று மதுரையில் செயல்பட்டு வருகிறார்.மேலும் கருணாநிதி சென்னையில் தனக்கு அடுத்தபடியாக மு.க. ஸ்டாலினையும், இலக்கியத்துக்கு மகள் கனிமொழியையும் வாரிசாக நியமித்து கண்ணும் கருத்துமாக அவர்களை முன்னிலைப் படுத்தி வருகிறார்.

**குண்டு வீச்சு**

ஏற்கனவே அழகிரிக்கும் ஸ்டாலினுக்கும் இடையே ஏற்பட்ட மோதலால் அழகிரி கட்சியிலிருந்து நீக்கப்பட்ட போது அழகிரியே நேரடியாக களத்தில் குதித்து பஸ்களை எரித்த சம்பவம் நடந்தது உண்டு.

கருணாநிதியின் அரசியல் வாரிசாக யார் வர வேண்டும் என்கிற கேள்வி எழுப்பி கருத்துக் கணிப்பு நடத்தப் பட்டதாகவும், அதில் ஸ்டாலினுக்கு 70% பேர் ஆதரவும் அழகிரிக்கு 2 சதவீத ஆதரவு மட்டுமே இருப்பதாகவும் முடிவுகள்



வெளியிடப்பட்டன.

இந்த கருத்துக்கணிப்பு மு.க.அழகிரியும் அவரது ஆதரவாளர்களையும் கொதிப்படையச் செய்தது. மதுரையில் அழகிரியின் ஆதரவாளர்கள் ஆங்காங்கே வன்முறையில் ஈடுபட்டனர்.

மதுரை பெரியார் பஸ் நிலையம் ஆரப்பாளையம் பஸ் நிலையம் ஆகிய இடங்களில் 8 பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன. இதில் பயணம் செய்த மக்கள் காயங்களுடன் உயிர் தப்பினர்.

அழகிரி எந்த அரசுப் பதவியிலும் கட்சிப் பதவியிலும் இல்லை.அழகிரிக்காக மதுரை மேயர் தேன்மொழி தலைமையில் தி.மு.க.வினர் தினகரன் நாளிதழ் அலுவலக வாசலில் முற்றுகைப் போராட்டம் செய்தனர். அப்போது தினகரன் அலுவலகம் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. அதில் மூன்று தினகரன் அலுவலர்கள் எரித்துக் கொல்லப்பட்டனர்.

# காவலர் துடிதுடித்து இறப்பதை கைக்கட்டி வேடிக்கை பார்த்த தி. மு. க. அமைச்சர்கள்





■ இந்தியா டுடே
08.01.2010
மொழிபெயர்ப்பு

திருநெல்வேலி மாவட்டத்தில் துணை ஆய்வாளரை மர்ம கும்பல் கொடூரமாகத் தாக்குதல் நடத்தியது. அந்த கும்பல் நகர்ந்து சென்ற பிறகும் ரத்தவெள்ளத்தில் நடுரோட்டில் துடி துடித்துக்கொண்டிருந்த காவலரைக் காப்பாற்றாமல் இரு தி.மு.க. அமைச்சர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது தமிழகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது, காவலர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த பாதையில் வந்த தி.மு.க. அமைச்சர்களின் கான்வாயில், சுகாதாரத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், இளைஞர் நலத்துறை மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் மொய்தீன் கானுடன் அரசு அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர் ஆகியோர் உடன் பயணித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த காவலரை அமைச்சர்கள் வேடிக்கை பார்த்த நிகழ்வு நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தி.மு.க. அமைச்சர்களின் இந்த மனிதாபிமானமற்ற செயலால் தமிழக அரசுக்கு அவமானம் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளனர். மேலும் அமைச்சர்களின் இந்த நடவடிக்கை குறித்து அவர்கள் இருவரும் முறையான விளக்கம் அளிக்கவேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. இது குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ள எதிர்க்கட்சி தலைவர் ஜெயலலிதா, அந்த இரு அமைச்சர்களையும் உடனடியாக தகுதி நீக்கம் செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார்.அந்த இரு அமைச்சர்களும் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்த காவலர் வெற்றிவேலுக்கு உதவிசெய்யாமல் வேடிக்கை பார்த்தது மட்டுமல்லாமல் அவரின் இறுதி ஊர்வலத்திலும் பங்கேற்கவில்லை. வீரப்பனைக் கைது செய்வதற்காக உருவாக்கப் பட்ட படையிலும் வெற்றிவேல் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இறந்த காவலருக்கு மரியாதை செய்யும் விதமாக எந்த அரசுத் தரப்பு பிரதிநிதியும் செல்லவில்லை என்றும் கூறப்படுகிறது.

# லீலாவதி கொலையில் தி.மு.க. வார்டு செயலாளர் பிடிபட்டார்

## லீலாவதி வந்தபோது சரமாரியாக வெட்டிக் கொன்றோம்

■ மக்கள் குரல்
27.04.1997

மதுரை பெண் கவுன்சிலர் லீலாவதி படுகொலை தொடர்பாக தி.மு.க. வார்டு செயலாளர் முத்துராமலிங்கம் கைது.

இன்று காலை 9 மணிக்கு தெப்பக்குளம் பகுதியில் பதுங்கி இருந்த தி.மு.க. வார்டு செயலாளர் முத்துராமலிங்கத்தை போலீசார் கைது செய்தனர்.

**வாக்குமூலம்.**

கொலை நடந்த 23ஆம் தேதி காலை சரியாக 6 மணிக்கு நான் எனது தம்பி அண்ணாதுரையின் வீட்டிற்கு சென்று அங்கு அவரது மைத்துனர் முருகன், முருகனின் நண்பன் சோக்கு என்ற முருகன்,எனது அக்காள் காளியம்மாள் மகன் நல்ல மருது மற்றும் மீனாட்சி சுந்தரம் ஆகிய 6 பேரும் எப்படியும் லீலாவதியை கொலை செய்ய வேண்டும் என்று பேசினோம்.

ஆளுக்கு ஒரு அரிவாளை எடுத்துக் கொண்டு சட்டைக்குள் மறைத்து வைத்துக் கொண்டோம். அப்போது லீலாவதி இருக்கும்



தெருவில் நாங்கள் மூன்று மூன்று பேராக சென்றோம்.

**படுகொலை**

வீட்டிற்கு கொலை செய்யலாம் என்று திட்டம் இருந்த எங்கள் எதிரிலேயே கடையில் எண்ணெய் வாங்குவதற்காக லீலாவதி ரோட்டில் நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது அந்த ரோட்டில் ஆள் நடமாட்டம் இல்லை.

எனவே இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாங்கள் அனைவரும் சேர்ந்து லீலாவதியை சரமாரியாக அரிவாளால் வெட்டி கொலை செய்தோம், என்று முத்துராமலிங்கம் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

# துரைமுருகன் குடும்பத்தினர் ஓட்டம்

## நில மோசடி புகாரில் கைது நடவடிக்கைக்கு பயந்து

■ தினமலர்
16.09.2011

முன்னாள் அமைச்சர் துரைமுருகன் குடும்பத்தினர் மீது நில மோசடி குறித்த விசாரணை முடிக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக கைது நடவடிக்கைக்கு பயந்து முன்னாள் அமைச்சர் குடும்பத்தினர் தலைமறைவாக உள்ளனர்.

வேலூர் காட்பாடி காந்திநகர் நகரமைப்பு சங்கத்துக்கு சொந்தமான, 66 ஆயிரம் சதுர அடி காலி இடம், காட்பாடி காந்திநகர் பி.டி., கல்லூரி ஆகிய பகுதிகளில் உள்ளது. பொதுமக்கள் ஆக்கிரமிப்பு செய்து விடாமல் இருக்க அந்த இடத்தை விற்பனை செய்ய,ஏலம் விட சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 2007 நவம்பர் 30 ஆம் தேதி நடந்த ஏலத்தில், தி.மு.க., முன்னாள் அமைச்சர் துரைமுருகன் மகன் கதிர் ஆனந்த், 5400 சதுர அடி நிலத்தை, 27 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய்க்கும், துரைமுருகன் மனைவி சாந்தகுமாரி, 4800 சதுர அடி நிலத்தை, 23 லட்சத்து 86 ஆயிரத்து 600 ரூபாய்க்கும், கதிர் ஆனந்த் மனைவி சங்கீதா, 5400 சதுரடி நிலத்தை 22 லட்சத்து 27



ஆயிரம் ரூபாய்க்கும் ஏலம் எடுத்தனர்.

**நிலமோசடி**

நவம்பர் 31ஆம் தேதி காந்தி நகர் ஈஸ்ட் மெயின் ரோட்டில் உள்ள, 6000 சதுர அடி நிலத்தை, துரைமுருகன் தம்பி துரைசிங்காரம், 28 லட்சத்து 26 ஆயிரத்துக்கும், அவரது மனைவி முல்லைக்கொடி 2008 ஜனவரி 31ம் தேதி நடந்த ஏலத்தில், 16 ஆயிரத்து 500 சதுர அடி நிலத்தை, 85 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் எடுத்தனர்.

இதுதொடர்பாக அப்போதைய முதல்வர் தனிப்பிரிவுக்கு, காட்பாடியைச் சேர்ந்த பலராமன், கார்த்திகேயன் உள்ளிட்ட 10 பேர் புகார் மனு அனுப்பினர்.

அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி உத்தரவுப்படி,துணை முதல்வர் ஸ்டாலின் நேரடி மேற்பார்வையில் இது குறித்து விசாரணை நடத்தியபோது உண்மை எனத் தெரிந்தது.

இதையடுத்து துரைமுருகன் குடும்பத்தினர் ஏலம் எடுத்த நிலத்தை சங்கத்துக்கு திருப்பி ஒப்படைக்கும்படி துரைமுருகனுக்கு துணை முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டார். வேலூர் மாவட்ட நில மோசடிப் பிரிவு டி.எஸ்.பி., முகமது கோரி, இதுகுறித்து விசாரணை நடத்தி அரசுக்கு அறிக்கை அனுப்பி உள்ளார். இதுதொடர்பான கைது நடவடிக்கைக்கு பயந்து துரைமுருகன் குடும்பத்தினர் முன் ஜாமீன் பெறும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். சில நாட்களாக துரைமுருகன் குடும்பத்தினர் தலைமறைவாக உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

# பெண்களை அவமரியாதை செய்வதா? உதயநிதி பேச்சுக்கு கண்டனம்

■ தி இந்தியன் எக்ஸ்பிரஸ் தமிழ்
08.01.2021

தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, “மோடிக்கு எடுபிடியாக ஆட்சி செய்து வருவதால் எடப்பாடி ஆட்சியை எடுபிடி ஆட்சி எனக் கூறுகிறோம். டெப்பாடி ஆட்சி என்கிறார்கள். சசிகலா கால்ல அப்படி தானே விழுந்து கெடந்தாரு. டேபிள், சேர்குள்ளலாம் புகுந்து விழுந்து கெடந்தாரு” என்று பேசியதோடு மிகவும் மோசமான வார்த்தையையும் பேசினார்.

உதயநிதியின் இந்த சர்ச்சை பேச்சைக் கேட்டு நிகழ்ச்சியில் பங்கேற்ற கட்சி நிர்வாகிகள் பலரும் சிரித்தனர்.


நடிகை குஷ்பு, தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி, சசிகலா குறித்து பேசியிருப்பது பெண்களை அவமதிப்பதாக உள்ளதாகக் கூறி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# ஐ. பெரியசாமி மீது பாய்ந்தது குவாரி மோசடி வழக்கு

■ தினமலர்
05.06.2012

திண்டுக்கல் அய்யம்பாளையம் சட்டைக்கரடு மலையில், தி.மு.க., ஆட்சியில் அரசு அனுமதியின்றி குவாரி செயல்பட்டது.இதில் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியதாக ஆத்தூர் ஒன்றிய தி.மு.க. செயலர் முரளிதரன், ஜூன் 2இல் கைது செய்யப்பட்டார்.முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி தூண்டுதலின் படி குவாரி நடத்தியதாக அவர் வாக்குமூலம் அளித்தார். அன்றே பெரிய சாமியையும் கைது செய்ய, திண்டுக்கலில் உள்ள வீட்டிற்கு போலீசார் சென்றனர். அவர் இல்லாததால் சோதனை நடத்தி திரும்பினர்.

நேற்று முன்தினம் இரவு, சென்னையில் இருந்து திரும்பிய பெரியசாமி, நேற்று காலை, டி.எஸ்.பி. அலுவலகத்தில் சரண் அடைந்தார்.அவரை கைது செய்து, மாவட்ட எல்லையில் உள்ள கூம்பூர் போலீஸ் ஸ்டேஷனில், இரண்டரை மணி



நேரம் வைத்திருந்தனர்.பின், நிலக்கோட்டை கோர்ட்டில் ஆஜர்படுத்தி, மாலை 4.45 மணிக்கு திருச்சி சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

கனிம வளங்களை திருடியது, ஏமாற்றுதல் ஆகிய பிரிவுகளில் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெரியசாமி கைது செய்யப்பட்டதால், திண்டுக்கல் கட்சி அலுவலகம் முன் கூடியிருந்த தொண்டர்கள்,

**குவாரி மோசடி**

கடைகள் மீது கற்களை வீசினர். கடைகள் அடைக்கப்பட்டன. மாவட்டம் முழுவதும் மறியல் செய்த 1200 தி.மு.க., வினர் கைது செய்யப்பட்டனர். 3 அரசு பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன.

# நில அபகரிப்பு வழக்கு

## அமைச்சர் நேரு கைது

■ தினகரன்
26.08.2011

திருச்சியில் தி.மு.க. அலுவலகம் கட்டியதில் நிலம் அபகரிக்கப்பட்டதாக தொடரப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் நேரு, முன்னாள் எம்.எல்.ஏ., அன்பில் பெரியசாமி உள்பட 7 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

திருச்சி கரூர் பைபாஸ் ரோட்டில் மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் சில ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இதற்கு துறையூர் சேர்ந்த டாக்டர் சீனிவாசன் என்பவரிடம் இருந்து 12,000 சதுர அடி நிலம் வாங்கப்பட்டது. இந்த நிலையில் முன்னாள் அமைச்சர் நேரு உள்ளிட்ட சிலர் தன்னை மிரட்டி இந்த நிலத்தை அபகரித்து கொண்டதாக டாக்டர் சீனிவாசன் திருச்சி போலீஸ் கமிஷனரிடம் புகார் அளித்தார். அதன்பேரில் மாநகர குற்றப் பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதுதொடர்பான விசாரணையை நில அபகரிப்பு பிரிவு போலீசார் மேற்கொண்டு வந்தனர். இதனடிப்படையில் முன்னாள் அமைச்சர் நேரு, லால்குடி தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ., சௌந்தரபாண்டியன், முன்னாள் எம்.எல்.ஏ., அன்பில் பெரியசாமி, திருச்சி துணை மேயர் அன்பழகன், மாவட்ட திமுக துணை செயலாளர் குடிமுருட்டி சேகர்,



நேருவின் தம்பி தொழிலதிபர் ராமஜெயம், ஜவுளிக்கடை அதிபர் சுந்தர்ராஜூலு, ஷெரீப், கொப்பம்பட்டி தமிழ்மாறன், தமிழ்ச்செல்வன், மாமுண்டி ஆகிய 11பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

**நில அபகரிப்பு**

இதனைத் தொடர்ந்து நேற்று அதிகாலை திருச்சி துணை கமிஷனர் ஜெயம் பாண்டியன், நில அபகரிப்பு விசாரணை பிரிவு உதவி கமிஷனர் மாதவன் ஆகியோர் தலைமையில் 100 போலீசார் நேரு வீட்டுக்கு சென்றனர். நேருவை நில அபகரிப்பு வழக்கில் கைது செய்வதாக கூறி அழைத்துச் சென்றனர். முன்னாள் எம்எல்ஏ அன்பில் பெரியசாமி, ஜவுளிக்கடை அதிபர் சுந்தர்ராஜூலு ஆகியோரை கைது செய்தனர். நேரு உள்ளிட்டோரை நேற்று மதியம் கடலூர் சிறையில் அடைத்தனர்.இதற்கிடையில் நேற்று மதியம் திருச்சி மாநகராட்சி துணை மேயர் அன்பழகன், குடுமுருட்டி சேகர், ஷெரீப், மாமுண்டி ஆகிய 4 பேரையும் கைது செய்தனர்.

நேரு உள்ளிட்ட 3 பேரையும் ரிமாண்ட் செய்வதற்காக திருச்சி கலெக்டர் குடியிருப்பு பகுதியில் உள்ள திருச்சி 4ம் எண் மாஜிஸ்திரேட் புஷ்பராணி வீட்டிற்கு 9:00 மணிக்கு போலீசார் வேனில் அழைத்துச் சென்றனர். அப்போது மாஜிஸ்திரேட் புஷ்பராணி வாரண்ட் எங்கே? என கேட்டார்.

அதிகாரிகள் சிறிது நேரத்தில் வந்து விடும் எனக் கூறினார். உடனே மாஜிஸ்திரேட் வாரண்ட் கொண்டுவந்து கொடுத்த பிறகு அவர்களை அழைத்துச் செல்லுங்கள். அதுவரை வேனை நகர்த்தக் கூடாது என்று உத்தரவிட்டார்.

அதன்பிறகு போலீசார் அவசரமாக அதை தயார் செய்தனர். சரியாக 9.25 மணிக்கு வாரண்டை தில்லைநகர் சிறப்பு எஸ்.ஐ. சுந்தரம் எடுத்துவந்து ஒப்படைத்தார். அதன் பிறகு நேரு உள்பட 3 பேரும் வேலூர் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

# நில அபகரிப்பு வழக்கில் பொன்முடி விடுவிப்பு செல்லாது

## ஐகோர்ட் அதிரடி

■ தினமலர்
07.09.2017

“நில அபகரிப்பு வழக்கில், முன்னாள் அமைச்சர் பொன்முடி விடுவித்தது செல்லாது” என, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை, சைதாப்பேட்டையில், 3600 சதுர அடி, அரசு நிலத்தை அபகரித்ததாக, முன்னாள் அமைச்சரும், தி.மு.க., எம்.எல்.ஏ., வுமான பொன்முடி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

அரசு நிலத்தின் ஒரு மூலையில், கண்ணன் என்பவர் வசித்ததாகவும், அவரை வெளியேற்றிவிட்டு, பொன்முடியின் மாமியார் சரஸ்வதிக்கு அந்த இடத்தை கண்ணன் விற்றது போல், ஆவணங்களை தயாரித்ததாகவும், குற்றம் சாட்டப்பட்டது. அந்த இடத்தில் பொன்முடி வீடு கட்டியுள்ளார்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, பொன்முடி மீது தொடரப்பட்ட வழக்கில், புலன் விசாரணை நடந்தபோது இந்த நில ஆக்கிரமிப்பு விஷயம் வெளிச்சத்துக்கு வந்தது.

அதைத் தொடர்ந்து மோசடி,



அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக தனியாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

வழக்கில் இருந்து விடுவிக்க கோரி, சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் பொன்முடி மனு தாக்கல் செய்தார்.

**நில அபகரிப்பு**

‘ஒரே குற்றத்துக்காக, இரண்டு முறை வழக்கு தொடர முடியாது’ எனக்கூறி வழக்கிலிருந்து பொன்முடியை செஷன்ஸ் நீதிமன்றம் விடுவித்தது. சொத்துக்குவிப்பு வழக்கிலும், பொன்முடி விடுவிக்கப்பட்டதை செஷன்ஸ் நீதிமன்றம் சுட்டிக்காட்டி இருந்தது.

நில அபகரிப்பு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டதை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை மனு தாக்கல் செய்தது.

மனுவை விசாரித்த, நீதிபதி வேல்முருகன் பிறப்பித்த உத்தரவு:

பொன்முடி மீதான இரண்டு வழக்குகளும், வெவ்வேறானவை; ஒன்று சொத்து சேர்த்த வழக்கு; மற்றொன்று, மோசடி வழக்கு. சொத்து சேர்த்த வழக்கில், இந்த நிலம் அடங்கிய சொத்து இடம்பெற்றது என்பதற்காக, அரசு நிலத்தை அபகரித்து குற்றச்சாட்டின் கீழ், சட்டப்படி போலீஸ் நடவடிக்கை எடுப்பதை தடுக்க முடியாது.

எனவே பொன்முடிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு, ஆரம்ப முகாந்திரம் உள்ளது. அதனால் வழக்கை அவர் எதிர்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# குடும்ப நிறுவனத்துக்கு சலுகை டி.ஆர். பாலு ஒப்புதல்!

■ தினமணி
24.04.2008

தனது குடும்ப நிறுவனத்துக்கு எரிவாயு வழங்குமாறு பெட்ரோலிய அமைச்சரை அணுகியதாக மத்திய நெடுஞ்சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.ஆர். பாலு ஒப்புக்கொண்டார்.

‘தனது மகன்கள் மற்றும் மருமகள்கள் நிர்வகிக்கும் நிறுவனத்துக்கு எரிவாயு வழங்க வேண்டும் என பெட்ரோலிய அமைச்சரை டி.ஆர். பாலு கேட்டுக் கொண்டுள்ளார். இது முழுக்க முழுக்க அதிகார துஷ்பிரயோகம்,” என்று மைத்ரேயன் கூறினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் டி.ஆர். பாலு “ஆமாம், எரிவாயு சப்ளை செய்யுமாறு பெட்ரோலிய அமைச்சரைக் கேட்டுக் கொண்டேன். அதில் என்ன தவறு இருக்கிறது” என்று கேட்டார் .

தேசிய ஜனநாயக கூட்டணி



அரசில் மத்திய அமைச்சர் பொறுப்பு வகிக்கும் முன்னர் இவ்விரு நிறுவனங்களிலும் தலைவர் பதவியை வகித்ததாக பாலு கூறினார்.

**அதிகார துஷ்பிரயோகம்**

தேசிய ஜனநாயக கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை தி.மு.க. 2003-ல் விலக்கிக் கொண்டது. அப்போது மத்திய அமைச்சர் பதவியையும் டி.ஆர். பாலு ராஜினாமா செய்தார். இவ்விரு நிறுவனங்களின் 40 ஆயிரம் பங்குதாரர்கள் மற்றும் ஊழியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பெட்ரோலிய அமைச்சரிடம் இத்தகைய கோரிக்கையை வைத்தேன், என்று பாலு கூறினார்.

# தி.மு.க. ‘மாஜி’க்கு பத்தாண்டு சிறை

## சிறுமி பலாத்கார கொலை வழக்கில் தண்டனை

■ தினமலர்
29.12.2018

சென்னை டிசம்பர் 29 வீட்டு வேலைக்கு வந்த 15 வயது சிறுமியை பலாத்காரம் செய்தது மரணம் ஏற்படுத்திய வழக்கில் தி.மு.க.வின் முன்னாள் எம்.எல்.ஏ.வுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை விதித்து சென்னை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டில் பெரம்பலூர் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. வாக இருந்தவர் ராஜ்குமார் 2012 ஜூனில் கேரள மாநிலம் இடுக்கி பீர்மேடு பகுதியைச் சேர்ந்த கூலித்தொழிலாளியின் 15 வயது மகள் வீட்டு வேலைக்காக ராஜ்குமார் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சில நாட்களில் தாயுடன் போனில் பேசிய சிறுமி தன்னால் இங்கு இருக்க முடியவில்லை என்றும் உடனே அழைத்துச் செல்ல வருமாறு கூறியுள்ளாள் மகளை அழைத்துச் செல்ல பெற்றோர் ஊருக்கு வந்தபோது ராஜ்குமாரின் நண்பர் ஜெய்சங்கர் உடல்நிலை சரியில்லாமல் தனியார் மருத்துவமனையில் சிறுமியை சேர்த்து இருப்பதாகவும் தாயிடம் தெரிவித்தார் மருத்துவமனையில் மகளை பார்த்தபோது சுய நினைவில்லாமல் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர் இரு நாட்களில் சிறுமி உயிரிழந்தார் சிறுமியின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அவரது பெற்றோர் அளித்த புகாரில், பெரம்பலூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர் பிரேத பரிசோதனையில் சிறுமி பாலியல் பலாத்காரம்

**சிறுமி பலாத்காரம்**

செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து முன்னாள் எம்.எல்.ஏ. ராஜ்குமார் அவரது நண்பர்கள் ஜெய்சங்கர் உள்ளிட்ட 7 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது

**ராஜ்குமார் சரணடைந்தார்**

ராஜ்குமார் முன்னாள் எம்.எல்.ஏ. என்பதால் எம்.எல்.ஏ., எம்.பி.,க்கள் மீதான



வழக்குகளை விசாரிக்க சென்னையில் ஏற்படுத்தப் பட்டுள்ள சிறப்பு நீதிமன்றத்துக்கு வழக்கு மாற்றப்பட்டது வழக்கை நீதிபதி விசாரித்தார் வழக்கில் நேற்று தீர்ப்பு என அறிவிக்கப்பட இருப்பதால் முன்னாள் எம்.எல்.ஏ. ராஜ்குமார் ஜெய்சங்கர் உள்ளிட்ட 6 பேரும் ஆஜராகியிருந்தனர் பாலியல் வன்முறை மரணத்திற்கு காரணமான கூட்டுச்சதி உள்ளிட்ட 3 பிரிவுகளில் ராஜ்குமாருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். ஜெய்சங்கருக்கு எதிரான கூட்டுச்சதி உள்ளிட்ட குற்றங்களுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப் பட்டது.

இப்பக்கங்களில் இடம்பெற்றுள்ள செய்திகள் யாவும் பல்வேறு செய்தித்தாள்களிலும், இணையம் செய்தித் தளங்களிலும், தொலைக்காட்சிகளிலும் வெளியிடப்பட்டவையே, எதுவும் கற்பனை அல்ல!

# தலித் மக்களை அவதூறாக பேசிய தி.மு.க. எம்.பி. கைது

■ தி டெக்கன் குரோனிக்கள்
24.05.2020
மொழிபெயர்ப்பு



கடந்த 15 ஆம் தேதி தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் குறித்த அவதூறு கருத்துக்களைக் கூறியதால் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

மறுநாள் எக்மோர் நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது. நங்கநல்லூரில் உள்ள அவரது வீட்டில் வைத்து காவல்துறையினர் ஆர். எஸ். பாரதியைக் கைது செய்தனர்.

தாழ்த்தப்பட்ட மக்கள் நீதிபதிகளாக உயர்வது, கருணாநிதி போட்ட பிச்சை என்று ஆர்.எஸ். பாரதி கூறியது தமிழகம் முழுவதிலும் பரபரப்பை ஏற்படுத்தியது. தலித் மக்களை கொச்சைப்படுத்தும் வகையில் பேசிய ஆர்.எஸ். பாரதியை வன்கொடுமை தடுப்பு

## அவதூறு பேச்சு

சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பில் இருந்தும் கோரிக்கைகளும் புகார் மனுக்களும் கொடுக்கப்பட்டிருந்தன.

இது குறித்து தி.மு.க. கட்சித் தலைவர் ஸ்டாலின் பேசுகையில், அரசு தனது தோல்விகளிலிருந்து மக்களைத் திசை திருப்பவே இதுபோன்ற பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறியுள்ளார்.

மேலும் இது குறித்து அவர் பேசுகையில், தாழ்த்தப்பட்ட மக்களின் நலவாழ்வுக்காக தி.மு.க. தொடர்ந்து பாடுப்பட்டு வரும் நிலையில், ஆர்.எஸ். பாரதியின் மீதான இந்த குற்றச்சாட்டு சிறு பிள்ளைத்தனமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்.எஸ்.பாரதியின் கைதைத் தொடர்ந்து தி.மு.க.வின் எம்.பி.களான தயாநிதி மாறன், டி.ஆர். பாலுவும் தாழ்த்தப்பட்ட மக்களைக் குறித்து சர்ச்சைக்குரிய கருத்தைத் தெரிவித்திருந்த நிலையில் அவர்கள் முன்ஜாமீன் கோரி உயர் நீதிமன்றத்தை அணுகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முரசொலி பஞ்சமி நில விவகாரம்: மு.க. ஸ்டாலினுக்கு உச்சநீதிமன்ற ஆணையம் சம்மன்

■ தி நியூஇந்தியன் எக்ஸ்பிரஸ்
17.12.2019
மொழிபெயர்ப்பு

எஸ்டி.எஸ்சி ஆணையத்தில் முரசொலி கட்டிடம் பஞ்சமி நிலத்தில் கட்டப்பட்டிருப்பதாகக் கூறி, இது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென பாஜகவின் மாநிலச் செயலாளர் ஆர். சீனிவாசன் பதிவு செய்த வழக்கில் மு.க.ஸ்டாலினுக்கு சம்மன் தேசிய தாழ்த்தப் பட்டோருக் கான வாரியம் சார்பாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு முரசொலி கட்டிடம் தொடர்பாக விசாரணைக்கு ஜனவரி 7 ஆம் தேதி ஆஜராகுமாறு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

முரசொலி நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவர் என்ற ரீதியில், அவருக்குச் சம்மன் அனுப்பப்பட்டுள்ளதாக எஸ்.சி/ எஸ்.டி ஆணையம் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஸ்டாலின் நேரில் ஆஜராகும் போது இந்த வழக்கு குறித்த எல்லாவிதமான அறிக்கைகளும், ஆவணங்களும் கொண்டுவரவேண்டும் என்றும் இந்த சம்மனில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

முரசொலி அலுவலகத்தின் சர்ச்சை முதன்முதலில் பாமக நிறுவனர் ராமதாஸின் குற்றச்சாட்டிலிருந்துதான் ஆரம்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து பாஜக மாநிலச் செயலாளர் ஆர். சீனிவாசன், எஸ்டி/ எஸ்.சி. ஆணையத்திடம் அளித்த புகாரின் பெயரில் கடந்த அக்டோபர் 21 ஆம் தேதி விசாரணை முடுக்கிவிடப்பட்டது.

பாமகவின் குற்றச்சாட்டு களுக்குப் பதிலளிக்கும் விதமாக, தி.மு.க.வின் அமைப்புச் செயலாளரும் வழக்கறிஞருமான ஆர்.எஸ்.பாரதி எஸ்.டி/ எஸ்.சி ஆணையத்தின் முன் ஆஜராகினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் சமீபத்தில் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் 1985ஆம் ஆண்டு பதியப்பட்ட பத்திரம் ஒன்றை வெளியிட்டார். ஆனால் பாஜக கட்சியைச் சேர்ந்த தடா பெரியசாமி, 1923 ஆம் ஆண்டு பதியப்பட்ட அசல் பத்திரங்களை வெளியிடுமாறு குற்றச்சாட்டியுள்ளார்.

## மின்வெட்டு

# வாசகர் கருத்து...

■ தினமலர்
29.03.2010

விலைவாசி முதல் மின்வெட்டு வரை எல்லாம் ஏறுமுகம் தான். ஆனால், மாத மின்சார பில் மட்டும் மேலும் குறையப் போகிறது. சாமியே, மின்வெட்டை மேலும் உயர்த்தி மாத பில்லை மேலும் குறைக்க வேண்டுகிறோம்.
இவண் : **கே ஜீவிதன்,** வில்லுபுரம், இந்தியா.

24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்க ஒரே வழி... மின் வாரியத்தை தனியார் மயமாக்குவதே. அப்பொழுதுதான் அதை கலைஞர் குடும்பம் வாங்கி விநியோகம் செய்யும். லாபம் பெருக்க 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கும்
இவண் : **H.நாராயணன்,** Hyderabad,India

ஆற்காடு வீராசாமியே முதல்ல பொய் சொல்லுவத நிறத்து. போன வாரம் தான் சொன்ன நான் இந்தியாவுக்கே மின்சாரம் தரமுடியும்ண்டு. ஆனால் இந்த வாரம் பார்த்த தினமும் மூனு மணி நேரம் கட் பண்ணுவம்ன்றேங்க என்னைய இது பெரிய பொய்யா இருக்குதே

இவண் :**கே பிரேம்** , மதுரை.

மக்களே பேசாமல் சூரிய ஒளியில் இருந்து நீங்களே மின்சாரம் எடுத்து வாழ கற்று கொள்ளுங்கள், சும்மா அரசாங்கத்தை போய் மின்சாரம் கொடு, சம்சாரம் கொடு என நச்சரிக்காதிர்கள். வேண்டுமென்றல் ஒரு கலர் டிவி இலவசமாக எடுத்து கொள்ளுங்கள்.
இவண் : **M.முனியாண்டி,** மூணார், இந்தியா

தமிழ் நாட்டில் நடப்பது ஊதாரித்தனமான பொறுப்பற்ற சிறுபிள்ளைதனமான ஆட்சி. இவர்கள் ஆட்சி நீடித்தால் தமிழகம் சோமாலியா போல் ஆகிவிடும்.
**இவண் : கே.ராஜ்சேகரன்,** சென்னை, இந்தியா

புதிய சட்டசபை 350 கோடி .....டிவி வாங்க 1000 கோடி ..... இப்படி பகட்டு விசயங்களுக்கு செலவு செய்யும் இந்த அரசு, ஏனோ அத்தியாவசியமான மின்சாரத்தை மறந்து விட்டது..
**இவண் : வினோத்,** சென்னை,


# மீண்டும் வேண்டுமா அந்த அராஜக ஆட்சி?

திமுகவிற்கு முற்றுப்புள்ளி வைப்போம்

பொது நலன் கருதி வெளியிடுவோர்:
அ.இ.அ.தி.மு.க.


# போராட்டத்தில் பங்கேற்ற தி.மு.க. பெண் நிர்வாகி இடுப்பை கிள்ளிய இளைஞர் அணி நிர்வாகியால் சலசலப்பு

■ ஒன் இந்தியா தமிழ்
06.04.2018

கரூரில் ஆர்ப்பாட்டத்தின் போது தி.மு.க. பெண் நிர்வாகி இடுப்பை கிள்ளியதாக இளைஞர் அணி நிர்வாகி மீது அந்த பெண் புகார் கூறியதோடு, தர்ணா நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. நேற்று காவிரி பிரச்சினைக்காக தி.மு.க. சார்பில் மாநிலம் முழுக்க ஆர்ப்பாட்டம், மறியல் நடந்தன.

கரூர் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ஜெயமணி என்பவரும் போராட்டத்தில் பங்கேற்பதற்காக வெங்கமேடு அண்ணா சிலை அருகே வந்திருந்தார். அங்கு ஆர்ப்பாட்டம், உருவபொம்மை எரிப்பு போன்றவற்றை தி.மு.க.வினர் நடத்தினர். அப்போது, தனது இடுப்பில் இளைஞர் அணி நிர்வாகி பிரபாகரன் என்பவர் கிள்ளியதாக ஜெயமணி புகார் தெரிவித்துள்ளார். தனக்கு பின்னால் வந்த பிரபாகரன், திடீரென இடுப்பில் கை வைத்ததாகவும் இதனால் அதிர்ச்சியடைந்ததாகவும் கூறியுள்ளார்.

## சலசலப்பு


நகர செயலாளர் கவனத்திற்கு இதை கொண்டு சென்றும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் கவனத்திற்கு இதை கொண்டு செல்வேன் என்றும் ஜெயமணி கூறியுள்ளார். கைது செய்யப்பட்டு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த தி.மு.க.வினருடன் ஜெயமணியும் இருந்தார். மாலையில் போலீசார் விடுவித்த போதும், மண்டபம் எதிரில் உட்கார்ந்து, நியாயம் கேட்டு அவர் தர்ணா நடத்தினார். இதனால் அங்கே பரபரப்பு ஏற்பட்டது. இதுகுறித்து விசாரிக்கப்படும் என மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் கூறியுள்ளார்.

# திருப்போரூர் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. கைது

## நிலத் தகராறில் துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் காயம்

■ தி இந்து தமிழ்
13.07.2020





செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சட்டப்பேரவை தொகுதி எம்.எல்.ஏ.வாக தி.மு.க.வை சேர்ந்த இதயவர்மன் உள்ளார். இவரது தந்தை லட்சுமிபதி, திமுகவின் முன்னாள் ஒன்றியக்குழு தலைவர். இவர் குடும்பத்துடன் திருப்போரூர் அருகே செங்காடு கிராமத்தில் வசித்து வருகின்றனர்.

இதே பகுதியைச் சேர்ந்தவர் குமார், செங்காடு கிராமத்தில் உள்ள அம்மன் கோயிலுக்கு சொந்தமான நிலத்தின் அருகே குமார் மற்றும் அவரது சகோதரருக்கு சொந்தமாக 300 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் உள்ளது.

இந்த நிலத்தில் பாதை அமைப்பதற்காக குமார் தரப்பினர் நேற்று முன்தினம் முயன்றனர்.

## துப்பாக்கி சூடு

இதற்கு எம்.எல்.ஏ். இதயவர்மன், அவரது தந்தை லட்சுமிபதி இருவரும் எதிர்ப்பு தெரிவித்தனர். எம்.எல்.ஏ. தரப்பினரும் தங்களது ஆதரவாளர்களுடன் அந்த இடத்திற்கு சென்றனர். அப்போது இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியது. அரிவாள், கம்பி, கட்டை போன்ற ஆயுதங்களுடன் இருதரப்பினரும் மோதிக் கொண்டனர்.

இதயவர்மன் எம்.எல்.ஏ. தனது பாதுகாப்புக்காக வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து குமார் மற்றும் அவரது ஆதரவாளர்களை நோக்கி சுட்டார்.

இதில் இரண்டு குண்டுகள் காரில் பட்டன. ஒரு குண்டு அந்த வழியாக சென்ற சீனிவாசன் என்கிற கீரை வியாபாரியின் கையில் பட்டது. இதில் அவர் காயம் அடைந்தார். இதயவர்மன் துப்பாக்கியால் சுடுவதை பார்த்ததும் குமாரும் அவரது ஆதரவாளர்களும் அங்கிருந்து சிதறி ஓடினர். அவர்கள் வந்திருந்த இரு சக்கர வாகனங்கள், டிராக்டர், பொக்லைன் போன்றவற்றை அங்கேயே விட்டுவிட்டு சென்று விட்டனர்.

அதைத்தொடர்ந்து எம்.எல்.ஏ.வின் ஆதரவாளர்கள், அந்த இருசக்கர வாகனங்களை தீயிட்டுக் கொளுத்தினர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# முதலிடத்தை பிடித்தது: தி.மு.க., ஓசி பிரியாணி

## ஸ்டாலின் எச்சரிக்கை.



■ தினமலர்
02.08.2018

சென்னை, விருகம் பாக்கத்தில் 'ஓசி பிரியாணி' தர மறுத்த கடைக்காரரை திமுக நிர்வாகிகள் சரமாரியாக தாக்கும் வீடியோ காட்சி, நேற்று சமூக வலைதளங்களில் வெளியானது.

அதைத் தொடர்ந்து 'ட்விட்டரில்' 'ஓசி பிரியாணி, தி.மு.க.,' என்ற ஹேஸ்டேக் ரெண்டிங் ஆனது. நேற்று மாலை இந்திய அளவில் ஓசி பிரியாணி திமுக ஹேஸ்டேக் முதலிடத்தை பிடித்தது.

இதுதொடர்பாக சமூக வலைத்தளங்களில் சிலர் பதிவிட்டுள்ள கருத்துக்கள்.

திராவிடநாடு லட்சியம், திருட்டு பிரியாணி நிச்சயம்.

அச்சம் என்பது மடமையடா; பிரியாணி திராவிடர் உடமையடா.

20 ஆண்டாக மெஜாரிட்டியை கிடைக்காம மக்களால் புறக்கணிக்கப்பட்டு 7 ஆண்டுகளாக ஆட்சியே இல்லாமல் இருந்தும், பழைய ரவுடி கொள்கையை இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர் தி.மு.க.வினர்.

**ஸ்டாலின் எச்சரிக்கை.**

தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கை: விருகம்பாக்கத்தில் உள்ள பிரியாணி கடை உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தி இருப்பது கடும் கண்டனத்துக்குரியது. கட்சி கட்டுப்பாட்டை மீறியவர்கள் நீக்கப்பட்டுள்ளனர். கட்சியின் நற்பெயருக்கு ஊறு விளைவிக்கும் வகையில் யார் செயல்பட்டாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கிறேன்.

# ஆபாச படம் எடுத்து பலாத்காரம் செய்து இளம்பெண் கொலை: தி.மு.க. நிர்வாகி தலைமறைவு!

■ ஏஷ்யாநெட் நியூஸ் தமிழ்
03.07.2020



ஆபாச படம் எடுத்து பாலியல் தொல்லை கொடுத்து பெண்ணை கொலை செய்த செய்யூர் பகுதி தி.மு.க. இளைஞரணி செயலாளர் தலைமறைவாகி விட்டார்.

இந்தச்சம்பவத்திற்கு தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி நியாயம் கேட்பாரா? என பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் அருகே நைனார் குப்பத்தில் இளம்பெண்ணுக்கு

## படுகொலை

பாலியல் தொல்லை கொடுத்து துன்புறுத்தியதுடன் கொலை செய்து தூக்கில் தொங்க விட்ட தி.மு.க. இளைஞரணி செயலாளர் தேவேந்திரனை காவல்துறையினர் தேடி வருகின்றனர். இந்நிலையில், மற்ற சம்பவங்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்து நொடிக்கொரு அறிக்கை என ஸ்டாலினும், மணிக்கொரு ட்விட் செய்து விமர்சனம் செய்யும் இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலினும் இந்த விவகாரத்திற்காக வாய் திறக்கவில்லை.

மற்றவர்களுக்கு ஒரு நியாயம், தங்களது கட்சியை சேர்ந்தவர்களுக்கு ஒரு நியாயமா? என பலரும் விமர்சனம் செய்து வருகிறார்கள்.

# 'பியூட்டி பார்லர்' பெண் மீது தாக்கு: தி.மு.க. மாஜி கவுன்சிலர் கைது

■ தின மலர்
14.09.2018



பெரம்பலூரில் கடனைத் திருப்பித் தராத பியூட்டி பார்லர் பெண் உரிமையாளரை தாக்கிய, தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் கவுன்சிலரை போலீசார் கைது செய்தனர்.

பெரம்பலூர், அன்ன மங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர் செல்வகுமார்,47; தி.மு.க. பிரமுகரான இவர் மாவட்ட பஞ்சாயத்து முன்னாள் கவுன்சிலர்.

மயூரி என்ற பெயரில் பியூட்டி பார்லர் நடத்தி வரும் செந்தில்குமார் மனைவி சத்யா, என்பவர் கடையை விரிவு படுத்த 20 லட்சம் ரூபாயை சில ஆண்டுகளுக்கு முன் செல்வகுமார் இடம் கடனாக வாங்கியதாக தெரிகிறது.

கடனை திருப்பித் தராமல்,சத்யா காலம் தாழ்த்தி வந்துள்ளார்.

## தாக்குதல்

ஆத்திரமடைந்த செல்வக்குமார் ஆகஸ்ட் 17 சத்யாவின் கடைக்குள் அத்துமீறி புகுந்து அவரை சரமாரியாக அடித்து உதைத்தார்.

பெரம்பலூர் போலீசிஸ் சத்யா கொடுத்த புகாரை அடுத்து இருவரும் சமாதானமாக போவதாக எழுதிக்கொடுத்து சென்றனர்.

இந்நிலையில் மீண்டும் செல்வகுமார் சத்யாவை மிரட்டியதாக தெரிகிறது.

செல்வகுமார் தன்னைத் தாக்கும் காட்சிகளை கண்காணிப்பு கேமரா பதிவு ஆதாரத்துடன் பெரம்பலூர் போலீசில்,சத்யா புகார் செய்தார். போலீசார் செல்வகுமாரை நேற்று கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# தி.மு.க. தொண்டர்களால் ஊடகவியலாளர் தாக்குதல்: உபகரணங்கள் உடைப்பு

■ தி இந்து
19.05.2014
மொழிபெயர்ப்பு



செய்தியாளர்களைத் தாக்கிய தி.மு.க.வினர்: கேமிராக்களும் உடைக்கப் பட்டன.கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்று தி.மு.க. தொண்டர்கள் தேர்தல் தோல்வி யால் ஸ்டாலினின் செனடாப் வீட்டின் முன் குவிந்திருந்த செய்தியாளர்களைத் தாக்கினர். ஞாயிற்றுக் கிழமை அன்று ஊடகங்களைச் சந்தித்த திமுக தலைவர் மு.கருணாநிதி கட்சியின் தோல்விக்குப் பிரதான காரணம் என ஊடகங்களைக் குற்றம்சாட்டினார். மேலும் தி இந்து நாளிதழைக் குறிப்பிட்டு, அந்த செய்தி நிறுவனம் தன் குடும்ப உறுப்பினர்களிடையே கலகம் விளைவிக்க முயல்வதாகவும் சாடினார். மு.க. ஸ்டாலின் கட்சி பொறுப்பிலிருந்து

## தாக்குதல்

விலகியதாக வந்த செய்தியைக் குறித்து அவரை பேட்டி காண்பதற்கு செனடாப் சாலையில் அமைந்துள்ள அவருடைய வீட்டின் முன் செய்தியாளர்கள் குவிந்திருந்தனர். அப்போது அங்கிருந்த செய்தியாளர் ஒருவர், ஸ்டாலின் தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்திருப்பது டிராமா என்ற மு.க. அழகிரியின் விமர்சனத்தைக் குறிப்பிட்டுப் பேசினார்.இதற்கு தி.மு.க. தொண்டர்கள் ஆட்சேபனை தெரிவித்து பத்திரிகை யாளர்களைத் தாக்கி அவர்களின் கேமரா உபகரணங்களை சேதப் படுத்தினர்.

இப்பக்கங்களில் இடம்பெற்றுள்ள செய்திகள் யாவும் பல்வேறு செய்தித்தாள்களிலும், இணையம் செய்தித் தளங்களிலும், தொலைக்காட்சிகளிலும் வெளியிடப்பட்டவையே, எதுவும் கற்பனை அல்ல!